செ.வெ.எண்-60 நாள்-31.08.2021

**அரியலூர் மாவட்டம்**

# பள்ளி இடைநிற்றல் குழந்தைகள் பணியாற்றும் வணிக நிறுவனங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் கல்வி வளர்ச்சியில் சிறப்பான இடத்தை பெறும் வகையில் பல்வேறு வகையான வளர்ச்சித் திட்டங்களை கல்வித்துறை மூலமாக மேற்கொண்டு வருகிறார்கள். அதன் அடிப்படையில், பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டுதல், தேவையான இடங்களில் பள்ளிகளின் தரத்தை உயர்த்துதல், மாணவ, மாணவிகளின் கற்றல், கற்பித்தல் திறனை மேம்படுத்துதல் உள்ளிட்டவைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

மேலும், கொரோனா பேரிடர் காலத்தில் பள்ளிகள் செயல்பாடத காரணத்தினாலும், குடும்ப சூழ்நிலையின் காரணமாகவும் ஒரு சில குழந்தைகள் பள்ளி படிப்பை தொடராமல், வணிக நிறுவனங்களில் பணியாற்றி வருகின்றனர். இக்குழந்தைகளுக்கும் உரிய கல்வி அளிக்கும் வகையில் வணிக நிறுவனங்களில் பணியாற்றும் பள்ளி இடைநிற்றல் குழந்தைகளை கண்டறிந்து, அவர்களுக்கு உரிய கல்வி அளிக்கவும், இவ்வணிக நிறுவனங்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில், இன்று (31.08.2021) அரியலூர் நகராட்சிக்குட்பட்ட துணிக்கடைகள், மளிகைக் கடைகள் உள்ளிட்டவைகளில் குழந்தை தொழிலாளர்கள் எவரேனும் பணிப்புரிகிறார்களா என்பது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.**, அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, கடைகளில் பணியாற்றி வரும் பணியாளர்களிடம் அவர்களது வயது குறித்தும், தற்போது கல்வி பயின்று வருகிறார்களா என்பது குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார். மேலும், கொரோனா பேரிடர் காலத்தில் வணிக நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் அனைவரும் கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்ளவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, வணிக நிறுவனங்களின் உரிமையாளர்களிடம், தங்கள் வணிக நிறுவனங்களில் குழந்தை தொழிலாளர்களை பணியமர்த்தினால் தங்கள்மீதும், தங்கள் நிறுவனத்தின் மீதும் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கல்வி ஒன்றே குழந்தைகளின் வாழ்வில் ஒளியேற்றும் என்பதால், வணிக நிறுவனங்கள் அனைத்தும், குழந்தை தொழிலாளர்களை தங்களது நிறுவனங்களில் பணியமர்த்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.**, அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், குழந்தை தொழிலாளர் குறித்து விழிப்புணர்வு ஒட்டுவில்லைகளை வணிக நிறுவனங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒட்டி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.எம்.இராமன், நகராட்சி ஆணையர் திருமதி.தமயந்தி, தொழிலாளர் நல ஆய்வாளர் திரு.குணசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**